தற்குத்தான் சரியாக இருக்கும். ஆனால், இதுவரைக்கும் மின்சார விஸ்த ரிப்பு செய்யப்பட்ட மற்ற கிராமங்களில் ஹரிஜன தெருக்களுக்கு மின்சாரம் போடப்படாமல் இருக்கிறது. இதை சர்க்கார் கவனித்து இந்தத் தொகையை அதிகரிப்பதற்கு சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் சொன்ன பதிலை கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் நான் வேறு பதில் சொல்ல முடியாது. நான் என்ன பதில் சொன்னேன் என்றால், புதியதாக கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படும்பொழுது அந்தத் திட்டத்தில் அங்கேயுள்ள ஹரிஜன காலனிகள் கண்டிப்பாக சேர்க்கப்பட வேண்டும் என்பது. அதற்கு ஹரிஜன நல இலாகாவிலிருந்து எந்தவித மான விசேஷ மானியமும் எதிர்பார்க்கவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன்னால் மின்சார விளக்குகள் போடப்பட்ட கிராமங்களில் ஹரிஜன காலனி களுக்கு மின்சாரம் போடுவதற்கு விடப்பட்டிருந்தால், அதற்குத்தான் இந்த ஹரிஜன நல இலாகாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷ மானியம் பயன்படுத்தப்படுகிறது.

SRI M. K. SOMASUNDARAM : ஹரிஜன காலனி களுக்கு லைட் போடுவதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த ஒரு லட்ச ரூபாய் மாகாண ரீதியாக பொதுவிலே வைக்கப்பட்டிருப்பதால், ஜில்லாவாரியாக பிரித்துக் கொடுக்காத காரணத்தி னால் கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதில் தாமதம் ஏற்படு கிறது என்று பிளாக் டெவலப்மெண்டு மீடிங்கில் சொல்லப்படுகிறது. அப்படியானால் இந்த ரூபாயை ஜில்லாவாரியாகப் பிரித்துக்கொடுத்து, இந்த வேலைகளைச் சீக்கிரம் நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர் கள் தயவு செய்து மேஜையின் மீது வைத்திருக்கக் கூடிய பதிலை படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வருஷ வாரியாக ஒதுக் கப்பட்ட தொகை பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாக, மாகாணவாரியாக பிரிப்பது என்பது கிடையாது.

SRI S. M. ANNAMALAI : சில பஞ்சாயத்து போர்டு களிலே ஹரிஜன காலனிக்கு ஸ்கீம் போட்டு ரெம்யூனரேடிவ் ஸ்கீமாக இருந்த போதிலும் கூட, பஞ்சாயத்து போர்டுகள் அதனுடைய மெயின்டி னன்ஸை ஏற்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ஜாதி ஹிந்துக் களுக்கு மின்சார விளக்கு இருந்தும், ஹரிஜன காலனிகளில் மின்சார விளக்குகளை மெயின்டைன் செய்ய முடியாது, என்று ஜாதி வித்தியாசத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள். அதைப் பற்றி சர்க்கார் கொள்கை என்ன ? பஞ்சாயத்து போர்டுகள் ஹரிஜன காலனிகளிலுள்ள விளக்கு களையும் மெயின்டைன் செய்ய வேண்டும் என்று சர்க்கார் வற்புறுத்த முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இது போன்ற புகார்கள் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. பஞ்சாயத்து போர்டு எல்லையில் இருக்க கூடிய ஹரிஜன காலனிகளுக்கும் மின்சார விஸ்தரிப்பு அளிக்கப்படவேண்டும். அவர்களுக்கு அதைப் போட முடியாவிட்டால்கூட, நாங்கள் இப்பொழுது உதவி கொடுக்கிறோம். புதிதாக எங்கு விஸ்தரிப்பு நடக்கிறதோ, அந்த ஊரிலுள்ள ஹரிஜன காலனிகளும் அந்த விஸ்தரிப்பிலே ஆரம்பத் திலேயே சேர்த்துக்கொள்ளப்படும். அதனால் ஒரு கஷ்டமும் ஏற்படாது.

Department of the Archæology for the State

* 899 *Q.*—SRI R. RANGANATHA MUDALIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have any proposal to implement the policy of the Central Government that every State should have its own Department of Archæology; and

18th March 1961]

(*b*) if so, the details thereof and when it will be put into effect?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

Medicinal herbs (Survey)

* 900 *Q*.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any survey of medicinal herbs in our State; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஸ்பெஷல் ஆபீஸர் செய்த சிபார்சுகளை டி.எம்.எஸ். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப் படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஏற்பாட்டிலே மருந்துக்கு வேண்டிய மூலிகைகளை ட்ரை பண்ணுவதற்கு இது போதும் என்று கருதப்பட்டது. ஏதாவது சிபார்சுகள் செய்தால் அவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எது பிராக்டிகலாக இருக்கிறதோ அதை ஏற்றுக்கொள்ளுகிறோம்.

SRI S. M. ANNAMALAI : நான்கு சிபார்சுகள் செய்யப்பட்ருக்கின்றன. நான்கு சிபார்சுகளில் ஒன்றைக் கூட டி.எம்.எஸ். ஏற்றுக்கொண்டதாக இந்த ஸ்டேட்மெண்டில் சொல்லப்படவில்லை. சில சாக்குப்போக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்பெஷல் ஆபீஸர் நியமித்து சிபார்சுகள் ஒன்றைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் டி.எம்.எஸ். விட்டுவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்று கேட்டேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சொல்லப்பட்ட நான்கு வகைகளிலே இல்லை. வேறு வகைகளிலே இதற்கு ஏற்பாடாகி இருக்கிறது.

Express Bus Service (extension)

* 901*Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எங்கெங்கு எக்ஸ்பிரஸ் பஸ் விட நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

(இ) மதுரை—லோயர் கேம்ப்,

மதுரை—கம்பம்,
மதுரை—தேனி,
மதுரை—போடி

ஆகிய இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடாத காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A statement [b] containing the particulars is placed on the table of the House.

---

[a] Printed as Appendix II on pages 89 90 infra.

[b] Printed as Appendix III on pages 90-91 infra.